ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1652/50 - 2010 මැයි 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.05.06

*1652/50 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் கூறப்படவேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகரசபை கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*(255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 157 (14அ) ஆம் உபபிரிவின் ஊவாக குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்திற்கு அமைய அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய களுத்துறை நகர சபையினால் தயாரிக்கப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை இடைநேர்விளைவான ஏற்பாட்டுச் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்படவேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண முதலமைச்சரும் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட இலக்கம் 1511/20 ஆம் மற்றும் 2007, ஓகத்து மாதம் 24 ஆந் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிச் குடியரசின் அதிவிசேடமான வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்ட முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதியென பெயரிடப்பட்ட கீழ் உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள துணைவிதி மேல் கூறப்பட்ட (255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி மேல் மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரசன்ன ரணதுங்க,<br>
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு,<br>
காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,<br>
மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு,<br>
பொருளாதார மேம்பாட்டு தொடர்பான அமைச்சர்,<br>
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சு.<br>
"சிராவஸ்தி மந்திரய",<br>
கொழும்பு 07,<br>
2010, ஏப்பிறல் 30.

**களுத்துறை நகர சபை எல்லைக்குள் முச்சக்கர வண்டியை நிறுத்தி வைத்தல்**

1. இத் துணைவிதி களுத்துறை நகர சபையின் முச்சக்கர வண்டிகள் தரித்து நிற்றல் தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

2. இத் துணை விதியானது, இச்சபையின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசத்துக்குள் முச்சக்கர வண்டிகள் தரித்து நிற்றலை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் தரித்து நிற்கும் இடங்களுக்கு கட்டணம் அறவிடுதல் பொருட்டு அமுல் செய்யப்படும்.

3. 1. நகர சபையின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள் முச்சக்கர வண்டிகள் தரித்து நிற்கக்கூடிய இடங்களையும் அந்த ஒவ்வொரு இடத்திலும் தரித்து நிற்கக்கூடிய முச்சக்கர வண்டிகளின் உச்ச எண்ணிக்கையும் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் தீர்மானிக்க வேண்டுமென்பதுடன், அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

3. 2. மேற்படி 3.1 ஆம் விதியின் பிரகாரம் முச்சக்கரவண்டிகள் தரித்து நிற்கும் இடத்தையும் எண்ணிக்கையையும் திருத்த வேண்டுமென சபை கருதவதாயின் சபையில் எடுக்கப்படும் தீர்மானமொன்றின் மூலம் அவ்வாறு செய்ய முடியுமென்பதுடன் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்ட குறித்த திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

3.3 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை தீர்மானிப்பதற்கும் அதன் வீச்சினையும் தரித்து நிற்கக்கூடிய முச்சக்கர வண்டிகளின் உச்ச எண்ணிக்கையையும் தீர்மானிக்கும் பொருட்டும் அல்லது அத்தீர்மானத்தை திருத்தும் பொருட்டு முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் உள்ளடங்கிய குழுவின் விதப்புரையை சபை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.4. 3.1 ஆம் விதிப்படி தரிப்பிடமொன்றில் தரித்து நிற்கக்கூடிய முச்சக்கரவண்டிகளின் உச்ச எண்ணிக்கையை உரிய தரிப்பிடத்தில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

3.5 தரிப்பிடத்தை முச்சக்கர வண்டிகள் ஒழுங்கு முறையாக தரித்து நிற்றல் வேண்டுமென்பதுடன் தரித்து நிற்கவேண்டிய விதத்தை சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலம் 4 அங்குல அகலமான வெள்ளை அல்லது மஞ்சள் நிறக்கோடு ஒன்றின் மூலம் அடையாளமிட்டு வைத்தல் வேண்டும்.

4. நகர சபை மூலம் முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைக்கும் பொருட்டு இத்துணை விதியின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அனுமதிப்பத்திரமொன்று சபைத் தலைவரால் வழங்கப்படுதலும் அதற்கான கட்டணம் விதித்து அறவிடுவதும் சட்ட ரீதியானதாகும்.

5. முச்சக்கர வண்டிகள் தரிப்பிடமொன்றில் தரித்து நிற்கும் முச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது தரிப்பிடத்துக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

6. 1. மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தமது நிரந்தர வதிவிடத்திற்கு அண்மையிலிருக்கும் முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கும் பொருட்டு நகர சபையிலிருந்து அனுமதிப்பத்திரமொன்றுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பதுடன் அதற்கான விண்ணப்படிவத்தை 50 ரூபா பணம் செலுத்தி சபையிலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

6.2. முச்சக்கரவண்டி ஒட்டுநர் உரிமையாளராயின் அவருடையதும், ஒட்டுநர் வாடகைக்கு அமர்த்தப்பட்டவராயின் அவருடையதும் உரிமையாளரதும் கீழ்க் குறிப்பிட்ட ஆவணங்களின் ஒளிப்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும் :-

i. முச்சக்கரவண்டி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமும் ;

ii. முச்சக்கர வண்டியின் பதிவுச் சான்றிதழ் ;

iii. வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதியின் தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமும்.

6. 3 அனுமதிக்கப்பட்ட முச்சக்கரவண்டிகள் சம்பந்தமாக ஆவணமொன்றை சபையின் பேன வேண்டுமென்பதுடன் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்டிருப்பின் அதனைக் குறிப்பீடு செய்து சிகப்பு மையினால் அடையாளம் இடுதல் வேண்டும்.

6.4. சபையினால் மாதாந்தம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது வருடாந்தம் முச்சக்கர வண்டிகள் தரித்து நிற்றலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியும்.

6.5 செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் ஒளிப்படப்பிரதியொன்றை தெரியும் வகையில் முச்ச்க்கர வண்டியின் முன் கண்ணாடியில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

6.6. முச்சக்கர வண்டியின் வலப்பக்கத்தை பயணிகள் வெளியேற முடியாவண்ணம் மூடி வைத்தல் வேண்டும்.

6.7. அனுமதிப்பத்திரம் முச்சக்கரவண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் பெயருக்கு வழங்கப்படல் வேண்டும்.

6.8. அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைவதற்கு இருவாரங்களுக்கு முன் முச்சச்கர வண்டி உரிமையாளர் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

6.9. மேற்படி 6.4 ஆம் பந்தியில் பிரகாரம் மாதாந்தம் அல்லது காலாண்டுக்கு ஒரு முறை அல்லது வருடாந்தம் அறவிட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் சபை மூலம் தீர்மானிக்கப்படவேண்டியதுடன் அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தில் அல்லது அதில் குறிப்பிடப்படும் அத்தகைய தினத்திலிருந்து வலுவிற்கு வருமாறு அறவிடுதல் வேண்டும்.

6.10. 4 ஆம் துணைவிதியின் பிரகாரம் சபை மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலொழிய முச்சக்கர வண்டி தரிப்பிடமொன்றுக்குல் முச்சக்கர வண்டியொன்றை செலுத்துதல் அல்லது நிறுத்தி வைத்தல் கூடாது.

6.11. வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்றை கொண்டிருந்த போதிலும் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் மூலம் அல்லது தலைவர் மூலம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோத்தரொருவர் மூலம் தற்காலிகமாக முச்சக்கர வண்டி தரிப்பிடத்திலிருந்து முச்சக்கர வண்டியை நீக்குவதற்கு கட்டளை இட முடியுமென்பதுடன் இவ்வனுமதிப்பத்திரம் அதற்கு இடையூறாக இருக்கக்கூடாது.

7. முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் பிற வாகனங்கள் நுழையவோ அல்லது தரித்து நிற்கவோ கூடாது.

8. தரிப்பிடத்தில் நுழைவாயிலுக்கு அல்லது அதிலிருந்து வெளியேறும் இடத்திற்கு இடைஞ்சலேற்படும் விதத்தில் முச்சக்கர வண்டிகளையோ அல்லது பிற வாகனங்களையோ நிறுத்தக்கூடாது.

9. தரிப்பிடத்திலிருந்து முச்சக்கர வண்டியை வெளியேற்றுதலுடன் தொடர்புற்ற ஏதேனும் திருத்த வேலையைத் தவிர தரிப்பிடத்துக்குள் வேறேதேனும் விதத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளலாகாது.

10. குறித்த முச்சக்கர வண்டியை நிறுத்திவைக்கும் பொருட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள தரிப்பிடத்தைத் தவிர வேறேதேனுமொரு இடத்தில் வாடகைக்குவிடும் நோக்கத்தில் முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைத்தலாகாது.

11. இந்த துணை விதிகள் வாரத்தின் சகல தினங்களிலும் 600 மணியிலிருந்து 2000 மணிவரை செல்லுபடியாதல் வேண்டும்.

11.1. மேற்படி 11 ஆம் துணை விதியில் குறிப்பிட்ட நேரங்கள் சபையின் தேவைக்கேற்றவாறு சபைக்கூட்டமொன்றில் எடுக்கப்படும் தீர்மானத்தின்பேரில் திருத்தப்பட முடியுமென்பதுடன், அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலொன்றின் மூலம் வெளியிட்டதன் பின்பு செயற்படுத்தப்பட வேண்டும்.

12. அனுமதிப்பத்திரமொன்றை கொண்டிருக்கும் ஒவ்வொரு முச்சக்கர வண்டியும் தரிப்பிடத்தில் தரித்து நிற்கும் வேளையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளைத் தவிர வெளிநபர்கள் அநாவசியமாக சுற்றித்திரியக்கூடாது.

*13. தரிப்பிடத்தில் எவரேனும் நபர் போதைப்பொருள் பயன்படுத்தலிலோ அல்லது அநாகரிகமாக நடத்தலிலோ அல்லது வேறேதும் குற்றச் செயலிலோ ஈடுபடக்கூடாது.*

*14. தலைவர் அல்லது அவரால் இக்காரியத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் கேட்கும் பட்சத்தில் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தை முச்சக்கர வண்டியின் சாரதியோ அல்லது உரிமையாளரோ சமர்ப்பிக்க வேண்டும்.*

*15. இத் துணை விதியின் ஏதேனுமொரு ஏற்பாட்டை மீறுதல் குற்றமொன்றாக கருதப்படுவதுடன், அக்குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்ட பின் எழுநூற்று ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும். அவ்வாறு மீறும் குற்றத்தை தொடர்ந்து செய்யும் சந்தரப்பத்தில் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்ட பின்னரும் அல்லது அத்தகைய மீறும் குற்றத்தின்பால் கவனத்தை ஈர்க்கும் எழுத்துருவிலான அறிவித்தலொன்றை தலைவரிடம் அல்லது அந்நோக்கத்திற்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் ஒப்படைத்த பின்னரும் அதே குற்றம் மேலும் செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூற்று ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக தண்டமொன்றும் விதிக்கப்படுவதற்கு ஆளாகுவார்.*

*15. 2. 15.1 ஆம் விதியின் பிரகாரம் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், விதிக்கப்படும் தண்டனைக்கு மேலதிகமாக சபையினால் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.*

*15.3. மேற்படி 15.1 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்ட ''தண்டப்பணம் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படல் வேண்டும்''.*

*16. பொருள்கோடல்–*

*''சபை'' என்பது களுத்துறை நகர சபை எனப்பொருள்படும்.*

*''தலைவர்'' என்பது, களுத்துறை நகர சபையின் தலைவர் எனப்பொருள்படும்.*

*''தலைவரால் அந்நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர்'' என்பது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட நகர சபையின் எவரேனும் உத்தியோகத்தவர் பொருள்படும்.*

*''தலைவரால் அந்நேரத்திற்காக தத்துவமளிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்'' என்பது தலைவரால் எழுத்துருவில் அதிகாரமளிக்கப்பட்ட நகர சபையின் எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.*

*''நியாயாதிக்கம்'' என்பது 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 225 ஆம் ''அத்தியாயத்தின்'' என்பது 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு 1978 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆந் திகதி உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாண அமைச்சரினால் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட களுத்துறை நகர சபையினது நியாயாதிக்கம் எனப் பொருள்படும்.*

*''முச்சக்கர வண்டி'' என்பது வாடகைக்கு விடும் நோக்கத்திற்கென தரித்து நிற்கும் முச்சக்கர வண்டி எனப் பொருள்படும்.*

*''வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதி'' என்பவர் முச்சக்ரவண்டி வண்டியை ஒட்டுவதற்காக அதன் உரிமையாளரினால் ஈடுபடுத்தப்பட்ட நபர் எனப் பொருள்படும்.*

*''தரிப்பிடம்'' என்பது களுத்துறை நகர சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடம் எனப் பொருள்படும்.*

*''குறிப்பிட்ட தரிப்பிடம்'' என்பது களுத்துறை நகர சபையின் தலைவரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட குறிப்பிட்டதொரு தரிப்பிடம் எனப் பொருள்படும்.*

*''மாதாந்தம்'' என்பது, ஒவ்வொரு மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பித்து அந்தந்த மாத்திற்கு ஏற்றவாறு 28 அல்லது 30 அல்லது 31 நாட்களைக் குறிக்கும்.*

*''காலாண்டு'' என்பது, ''மாதாந்தம்'' என்பது, வரையறுக்கப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை உள்ளடங்களாக சனவரி 1 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்குமான அடுத்தடுத்து 3 மாதங்களைக் குறிக்கும்.*

*''வருடாந்தம்'' என்பது, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து ஆரம்பித்து திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் பஞ்சாங்க ஆண்டொன்று எனப்பொருள்படு.*

"பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது, 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 53 ஆம் அத்தியாயத்தில் 104 ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்ட அதே பொருள்படும்.

"பிற வாகனங்கள்" என்பது மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு அதே பொருள்படும்.

"பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்" என்பது, மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே வரைவிலக்கணம் எனப் பொருள்படும்.

"தவறான செயல்" என்பது, தவறிழைத்தல் கட்டளைச் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே பொருள்படும்.

17. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

**முதலாம் அட்டவணை**

3.3 ஆம் இலக்க துணை விதி

நியமிக்கப்படவிருக்கும் குழுவானது கீழ்க்குறிப்பிட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. இக்குழுவின் தலைவராக நகர சபையின் தலைவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் செயலாளராக சபையின் வருமானப் பரிசோதகர் இருத்தல் வேண்டும்.

2. நகர சபையின் செயலாளரும் தொழிநுட்ப உத்தியோகத்தரும்.

3. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அல்லது அவரினால் பெயர் குறித்துரைக்கப்படும் பிரதிநிதியொருவர்.

4. பிரதேச வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் அல்லது அவரினால் பெயர் குறித்துரைக்கப்படும் பிரதிநிதியொருவர்.

5. களுத்துறை வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தவைவர் அல்லது அவரினால் பெயர் குறித்துரைக்கப்படும் பிரதிநிதியொருவர்.

6. வரையறுக்கப்பட்ட களுத்துறை பஸ் கம்பனியின் தலைவர் அல்லது அவரினால் பெயர் குறித்துரைக்கப்படும் பிரதிநிதியொருவர்.

7. சபையின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் வாகனப்போக்குவரத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அல்லது ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் அவர்களினால் பெயர் குறித்துரைக்கப்படும் பிரதி நிதியொருவர்,

8. சபையின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட ஒவ்வொரு முச்சக்கர வண்டி சங்கத்திலிருந்தும் பிரதிநிதியொருவர்.

## *2 ஆம் அட்டவணை*

*4 ஆவது உப விதி யாப்பு*

பற்றுச்சீட்டு இல. இல.

**முச்சக்கரவண்டி தரிப்பிட அனுமதிப்பத்திரம்.**

பெயர் :----.
அடையாள இல. :----.
கட்டணம் :----.
தரிப்பிடம் :----.
செல்லுபடியாகும் காலம் :----.
திகதி :----.

தலைவர்,
களுத்துறை நகர சபை.

*13 செ. மீ. விட்டத்தைக் கொண்ட வட்டமொன்றாகும் வரைபடத்தில் காட்டப்பட்டவாறு நகர சபை இலச்சினையை உள்ளடக்கிய கபில நிற (Maroon Colour) பின்னணியைக் கொண்ட ஸ்ரிக்கர் ஒன்றாகும்.*

**மூன்றாம் அட்டவணை**

துணை விதி 6.2

முச்சக்கர வண்டி தரிப்பிட அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. (i) விண்ணப்பகாரரின் பெயர் :----.

(ii) நிரந்தர விலாசம் :----.

(iii) வரி மதிப்பீட்டு இலக்கம் : -

(iv) நிரந்தர விலாசத்திற்குரிய உள்ளூராட்சி நிறுவனம் :----.

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

2. (i) முச்சக்கர வண்டியின் பதிவு இலக்கம் :----.

(ii) சாரதி உரிமையாளரா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டவரா?

1. சாரதி உரிமையாளராயின், செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.

2. வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதியாயின்-

(அ) சாரதியின் பெயர் :----.

(ஆ) நிரந்தர விலாசம் :----.

(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

(ஈ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.

3. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பீக்கும் முச்சக்கர வண்டி தரிப்பிடம் :----.

4. அனுமதிப்பத்திர விண்ணப்ப காலம் :- ஒரு மாதத்திற்கு / 3 மாதங்களுக்கு/ஒரு வருடத்திற்கு :----.

மேலே என்னால் கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகவல்கள் பிழையானவை என கண்டுபிக்கப்பட்டால், எனது முச்சக்கர வண்டி தரிப்பிட அனுமதிப்பத்திரம் முன்னறிவித்தல் இன்றி ரத்துச் செய்யப்படும் எனவும், நகர சபையினால் அமுல்படுத்தியுள்ள முச்சக்கர வண்டி நிறுத்தல் பற்றிய துணை விதியில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவேன் எனவும் நான் உறுதி செய்கின்றேன்.

......................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

திரு./ திருமதி........................................................... அவர்கட்கு......................................... இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டியை........................................................... என்ற தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கும் பொருட்டு அனுமதிப் பத்திரத்தை........... ........................................ காலத்திற்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கின்றேன்.

......................................
தலைவர்,
களுத்துறை நகர சபை.

திகதி :----.

5- 480

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

3 - PG 001139